# யூலை- 28 - வெள்ளி

### தூய அல்போன்சா

### நமது உள்ளம் இறைவார்த்தையை ஏற்கும் நல்ல நிலமா?

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 20: 1 – 17

கடவுள் அருளிய வார்த்தைகள் இவையே. நானே உன் கடவுளாகிய ஆண்டவர் அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர்.என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம்.நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக்கொள்ளமாட்டேன் என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்.மாறாக என்மீது அன்புகூர்ந்து என் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன்.உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே் ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடார்.ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய்.ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே அன்று நீயும் உன் மகனும் மகளும் உன் அடிமையும் அடிமைப்பெண்ணும் உன் கால்நடைகளும் உன் நகர்களுக்குள் இருக்கும் அன்னியனும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்.ஏனெனில், ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வுநாளுக்கு ஆசிவழங்கி அதனைப் புனிதப்படுத்தினார்.உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி, உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட.கொலை செய்யாதே.விபசாரம் செய்யாதே.களவு செய்யாதே.பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே் பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை, அல்லது பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே.

**பதில்பாடல் :** ஆண்டவரே நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.

## நற்செய்தி: மத்தேயு 13: 18 - 23

அக்காலத்தில் ,யேசு கூறியதாவது : “விதைப்பவர் உவமையைப் பற்றிக் கேளுங்கள். வழியோரம் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறையாட்சியைக் குறித்த இறைவார்த்தையைக் கேட்டும் புரிந்து கொள்ளமாட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்லுவான்.பாறைப் பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள்.ஆனால், அவர்கள் வேரற்றவர்கள். எனவே அவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பார்கள் இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ இன்னலோ நேர்ந்த உடனே தடுமாற்றம் அடைவார்கள்.முட்செடிகளுக்கு இடையில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும் செல்வ மாயையும் அவ்வார்த்தையை நெருக்கிவிடுவதால் பயன் அளிக்க மாட்டார்கள்.நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள். இவர்களுள் சிலர் நூறு மடங்காகவும், சிலர் அறுபது மடங்காகவும் சிலர் முப்பது மடங்காகவும் பயன் அளிப்பர்.” என்றார்.

**தியானம் :** இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் திருமுழுக்கு அருளடையாளத்தால் நல்ல நிலங்களாக மாற்றப்பட்டுள்ளோம். ஆவியானவரோடு எவ்வளவு ஒத்துழைப்பு கொடுக்கின்றோமோ ,அதைப்பொறுத்து 30ம், 60ம், 100மடங்காக பலன்கொடுப்போம். இறையன்பையும், பிறரன்பையும் இணைத்து வாழும் நல்ல உள்ளங்கள் இறை சன்னிதியில் புனித நிலையை அடைகின்றார்கள். இயேசுவின் வழியில் நடக்கும் நாம், நம்முடைய ஆதாயத்தை நிறைவேற்றிக்கொள்ள இயேசுவைப் பின்தொடர்கின்றோமா? அல்லது இயேசுவின் வார்ததைகளில் இருக்கும் வல்லமையை உணர்ந்து அவரை பின்தொடர்கின்றோமா? என்று சிந்தித்து பார்க்க வேண்டும். இயேசுவின் வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன. எனவே இயேசுவின் வார்த்தைகளில் இருக்கும் வல்லமையை உணர்ந்து நல்ல பலன் கொடுக்கும் நல்ல உள்ளம் கொண்டவர்களாக மாற இறை அருள் வேண்டுவோம்.